Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 12, 2024

வெள்ளிக்கிழமை ஜனவரி 12, 2024 | ஒளி: 10 கதிர் 170 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ | FREE

## 7 மணி 45 நிமிடம் கட்டாய கடமை




அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அலுவலகங்களில் இருந்து கடமைகளைச் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை மூலம் இதனைத் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “நடுகடலில் விஸ்கி விருந்து”



**வங்குரோத்தடைந்த நாட்டில் அரச நிதியை எப்படி இவ்வாறான நிகழ்வுக்குப் பயன்படுத்த முடியும்**

“நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலைமையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான படகுகளை பயன்படுத்தி கடலுக்கு நடுவில் விருந்து நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர்” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்தே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

“இந்த பாராளுமன்றத்தில் அரச தரப்பு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு படகுகளை பயன்படுத்தி கடலுக்கு நடுவில் இரண்டு தினங்களுக்கு முன்னர் பெரிய விருந்து நிகழ்வை நடத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “தேநீர் கொடுப்பது தவறா?”



**அரச தரப்பினர் கப்பலில் உல்லாச விருந்தில் ஈடுபட்டுள்ளார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்தார்**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள், அரச தரப்பின் எம்.பி.க்கள் உள்ளிட்டவர்கள் துறைமுகத்தை பார்வையிட வந்தபோது தேநீர் கொடுத்தது தவறா? என கேள்வி எழுப்பிய துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, அவ்வாறு தேநீர் கொடுத்ததை திருட்டுத்தனமாக புகைப்படம் எடுத்தவர்களை உடனடியாக கைது செய்வதுடன் பொய் செய்தி வெளியிட்ட ஊடகங்களுக்கு எதிரான கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

### பெருந்தோட்ட மக்களின் சம்பளம் தொடர்பில்

## “விரைவில் சாதக முடிவு”



அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்தும் போது, பெருந்தோட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை சந்தித்த இளவரசி ஆன்...



மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானியாவின் இளவரசி ஆன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இளவரசி ஆனி உள்ளிட்ட அரச தூதுக்குழுவினரை, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அன்புடன் வரவேற்றார்.

தொடர்ச்சி P2

## “மத்திய வங்கி ஆளுநர் மீது நம்பிக்கையில்லை”



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போது, “மத்திய வங்கி ஆளுநர் மீது நம்பிக்கையில்லை” என எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## குருந்தூர்மலை வழக்கு கிடப்பில்

*சண்முகம் தவசீலன்*

சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரை குருந்தூர்மலை வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ்.எஸ்.தனஞ்சயன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “நற்பெயரை பெற உரையாற்றுகிறார்”

**எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சஜித் மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்**



“எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நற்பெயரை பெறும் நோக்கில் பாராளுமன்றத்தில் உரைகளை நிகழ்த்தி வருகின்றார். எதிர்க்கட்சித் தலைவரை மட்டும் பேச அனுமதிப்பதன் மூலம் அவர் சொல்வதே பிரபலமாகிவிடும்”

தொடர்ச்சி P2

## “வீதிக்கு இறக்குவோம்”



அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் 30ஆம் திகதி மக்களை வீதிக்கு இறக்குவோம், அதன்பின்னர் அரசாங்கத்தை விரட்டியடிக்காது திரும்ப மாட்டோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “மஹிந்த ராஜபக்ஷ ஒரு பெரிய மகாபபா”



“பெரஹராவின் போது கொண்டு செல்லப்படும் ‘மகாபபா’ உருவத்தை போன்று ஒருபக்கம் சிரித்த முகத்தையும் மற்றைய பக்கம் கோர முகத்தையும் கொண்டவரே மஹிந்த ராஜபக்ஷ” என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இளவரசி ஆன் யாழுக்கு விஜயம்



இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வியாழக்கிழமை (11) விஜயம் செய்தனர்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்கு வானூர்தி மூலம் வருகை தந்த இளவரசி, யாழ்ப்பாணம் நாவாந்துறை பொது மைதானத்தில் தரையிறங்கிய போது, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வரவேற்றார்.. இதன்போது பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் சிநேகபூர்வ கலந்துரையாடலும் இடம்பெற்றது.

### கிணற்றுக்குள் மண்ணெண்ணெய்

## பரிசோதித்து அறிகையிட நீதிமன்றம் உத்தரவு

*செ.கீதாஞ்சன்*

புதுக்குடியிருப்பு உடையார் கட்டு குரவில் கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) கிணற்றினை இறைக்கும்போது, கிணற்றில் இருந்து மண்ணெண்ணெய் கசிவு ஏற்பட்டிருந்தது பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# “நடுகடலில் விஸ்கி விருந்து”

நாட்டு மக்கள் பக்கமிருந்தே இந்த விடயம் தொடர்பில் கதைக்கின்றேன். துறைமுக இராஜாங்க அமைச்சர் எழுத்து மூலம் அனுமதி பெற்றுக் குறித்த இரண்டு படகுகளைப் பெற்று விருந்து நிகழ்வை நடத்தியுள்ளனர்.

மாணவர்களின் பஸ் சீசன் டிக்கெட்டுக்களை இல்லாமல் செய்து அரச நிதியை எப்படி இவ்வாறான நிகழ்வுக்குப் பயன்படுத்த முடியும். வங்குரோத்தடைந்த நாட்டில் அரச சொத்தை பயன்படுத்தி கடலுக்கு நடுவில் விஸ்கி, உணவு கொண்டுவந்து விருந்தை நடத்தியுள்ளனர்.

துறைமுக உணவகத்தில் இருந்த உணவைப் பெற்றுள்ளனர்.

இது தொடர்பில் வேண்டுமென்றால் புகைப்படங்களையும் சமர்ப்பிக்க முடியும். நீங்கள் தனிப்பட்ட இடத்திற்குச் சென்று தனிப்பட்ட

> **“இது தொடர்பில் வேண்டுமென்றால் புகைப்படங்களையும் சமர்ப்பிக்க முடியும்**

பணத்தில் எதனைச் செய்திருந்தாலும் எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் குறித்த படகுகள் மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தும் படகுகள் அவற்றில் ஏறியுள்ளார்கள். அங்கே செங்கம்பலமும் விரிக்கப்பட்டிருந்தது. வங்குரோத்தடைந்த நாட்டில் எவரும் இப்படி நடப்பதில்லை.

சிறுவர்கள், கர்ப்பிணிகள், இளைஞர்கள், வர்த்தகர்கள் என அனைவரின் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருக்கையில் எப்படி முன்னாள் ஜனாதிபதி துறைமுக அதிகாரசபையின் படகில் ஏறி, நடுக் கடலுக்கு சென்று விருந்து நடத்த முடியும்” என தெரிவித்துள்ளார்.

# “தேநீர் கொடுப்பது தவறா?”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ உட்பட அரச தரப்பினர் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த போது, செங்கம்பளம் விரித்து அவர்கள் வரவேற்கப்பட்டார்கள். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரச தரப்பினர் கப்பலில் உல்லாச விருந்தில் ஈடுபட்டுள்ளார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் பொய்க் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கொழும்பு துறைமுகத்தின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் தெளிவு படுத்துமாறு அரச தரப்பின் உறுப்பினர்கள் பலமுறை வலியுறுத்தினார்கள். துறைமுக விடயதானத்துடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சர் என்ற அடிப்படையில் நான் அவர்களைத் துறைமுகத்தைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் சென்றேன். வீட்டுக்கு வந்தவர்களுக்குத் தேநீர் கொடுப்பதில் தவறென்ன உள்ளது?. அன்று இரவு இடம்பெற்ற விருந்துபசாரத்துக்குத் துறைமுக அதிகார சபையின் நிதி செலவழிக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ உட்பட அரச எம்.பி.க்கள் கலந்து கொண்ட விருந்துபசாரத்தைத் திருட்டுத்தனமாகப் படமெடுத்து அதனை ஊடகங்களுக்கு வழங்கியவர்கள் கைது செய்யப்பட வேண்டும். அத்துடன் பொய்யான செய்தி வெளியிட்ட ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என தெரிவித்தார்.

## ஜனாதிபதியை சந்தித்த இளவரசி ஆன்...

அதன் பின்னர் இளவரசி ஆனி உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோருடன் இணைந்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனாதிபதி மாளிகையில் வைக்கப்பட்டுள்ள சிறப்பு விருந்தினர் நினைவுப் புத்தகத்தில் இளவரசி ஆனியும் பதிவைச் செய்துள்ளார்.

மேலும், இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## “நற்பெயரை பெற உரையாற்றுகிறார்”

என அரச தரப்பின் பிரதம கொறடாவும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் உரைக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில், “இந்த நாட்டில் சிறு பிள்ளையிலிருந்து அனைவரின் வாழ்க்கையும் அழிந்து கொண்டிருக்கும் போது முன்னாள் ஜனாதிபதி துறைமுகத்தில் இரண்டு கப்பல்களை எடுத்துக்கொண்டு நடுக்கடலில் விருந்து வைப்பது எப்படி?” என ஒரு கேள்வியைச் சபாநாயகரிடம் எழுப்பினார்.

இதற்கு அரச தரப்பின் பிரதம கொறடாவும் , அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பதிலளிக்கையில்,

“எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர் அடிக்கடியும் நீண்ட நேரமும் பேசும்போது, நேரப் பிரச்சினை எழுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் மிகவும் பொறுப்புடன் செயல்பட வேண்டும். பேச்சுக் கொடுப்பதை விட, சம்பந்தப்பட்ட விடயத்தைப் பற்றிப் பொறுப்பான அமைச்சரிடம் கேள்வி கேட்பது நல்லது. பொதுமக்களின் பணம் விரயம் செய்யப்பட்டிருந்தால், அதை முறையாகக் கையாளுங்கள். நல்ல பெயரை எடுக்கப் பேச்சுக் கொடுக்கிறார். சும்மா மூன்றாம் வகுப்பில் மட்டும் வேலை செய்யாதீர்கள் எதிர்க்கட்சித் தலைவரே” என்றார்.

இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பதிலளிக்கையில், “நான் என்னைப் பற்றியோ, எனது குடும்பத்தினரைப் பற்றியோ அல்லது என்னுடன் தொடர்புடைய வர்த்தகங்களைப் பற்றியோ பேசவில்லை. எனவே தயவுசெய்து எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். என் வாயை மூடாதீர்கள் சபாநாயகரே” என்றார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதற்குப் பதிலளிக்கையில், எனக்கு உங்கள் வாயை மூட வேண்டிய அவசியம் இல்லை.. ஆனால் எனக்கு நேரம் முக்கியம் என்றார்.

அப்போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க - சபாநாயகரே என்னையும் பேச அனுமதியுங்கள் என கோரியபோது ”இல்லை.. நீங்களும் உட்காருங்கள்” என சபாநாயகர் தெரிவித்தார்.

## “வீதிக்கு இறக்குவோம்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மந்தபோசனையை இல்லாது செய்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வற் வரி மக்களுக்குத் தெரியவில்லை என்றும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார். வெளியில் சென்று பார்த்தால் அவருக்கு நடப்பது என்ன என்று தெரியும். வரிகளை அதிகரிக்க முன்னர் ஆய்வுகளைச் செய்தே அதனைச் செய்ய வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. இந்நிலையில் மக்கள் நாளாந்தம் உணவுக்காகக் கடன் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 22 மில்லியன் மக்களில் 11 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆட்சியாளர்களோ மக்களின் பிரச்சினைகள் எதுவும் தெரியாததைப்போன்று இருக்கின்றனர்.

இதனைப் புரியாது நடுக்கடலில் விருந்து நிகழ்வுகளை நடத்திக்கொண்டு இருக்கின்றனர். அடுத்ததாக இரண்டாவது சுற்று அடிகளை வாங்கவும் போகின்றனர். பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொய்யான செய்திகளை வெளியிட ஐக்கிய தேசியக் கட்சியினர் திட்டமிடுகின்றனர். அவ்வாறு செய்துகொண்டே ஒன்லைன் சட்டமூலத்தையும் கொண்டுவருகின்றனர் என்றார்.

## “மத்திய வங்கி ஆளுநர் மீது நம்பிக்கையில்லை”

மேலும் அவர் கூறுகையில், “பாராளுமன்றத்திற்கே நிதி அதிகாரம் உள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கூறியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன கூறுகின்றார். ஆனால் நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் ஒருபோதும் இந்த பாராளுமன்றத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த விடயத்தை அவர் மூடி மறைத்தார்.

2022ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். அப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கின்றது என்று கேட்டேன். 20 மில்லியன் டொலர்கள் இருப்பதாக கூறினார். அப்போதே நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்பதனை அறிந்துகொண்டோம். எனவே அவ்வாறான மத்தியவங்கி ஆளுநர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை” தெரிவித்தார்.

## “விரைவில் சாதக முடிவு”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்ற வாழ்க்கை செலவு உயர்வு மற்றும் மந்தபோஷனை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை பிரேரணை விவாதத்தின் போது உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான எம்.வேலுகுமார், அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பெருந்தோட்ட மக்களுக்கு 1000 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்படுகிறது.

வற் வரி 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன.ஆனால் பெருந்தோட்ட மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. வாழ்க்கை செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் ஏன் பெருந்தோட்ட மக்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை என நிதி இராஜாங்க அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, “வேலுகுமார் எம்.பி.முன்வைத்த விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதார பாதிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரவு செலவுத் திட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய அரச சேவையாளர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பொருளாதார நிலைமை சாதகமாக உள்ளதால் இந்த மாதம் 5000 ரூபாவை முதல் தவணையாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயற்படுத்தும் போது பெருந்தோட்ட மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். வெகுவிரைவில் சாதகமான முடிவு கிடைக்கும்” என தெரிவித்தார்.

## “மஹிந்த ராஜபக்‌ஷ ஒரு பெரிய ‘மகாபபா”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மந்தபோசனையை இல்லாது செய்வதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போதே கபீர் ஹாசீம் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர், “அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற தீர்மானங்களினாலேயே நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்பதனை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வற் வரி அதிகரிப்பு மற்றும் புதிதாகப் பொருட்கள் மீது வரிகளை அறவிடுவதால் மக்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். பொருளாதார சீர்குலைவால் கட்டிட நிர்மானத்துறை, மத்திய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

முடிந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், எஞ்சியுள்ள மக்கள் தமது பசிக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றர்.

இந்நிலையில், மேலும் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, கடன், வறுமை, தொழில் இல்லாமை, கல்வி வீழ்ச்சி உள்ளிட்ட ‘வற்’க்கு தீர்வு காண முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

நாட்டை வங்குரோத்துக்கு யார் காரணம் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஆனால் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காது இந்த அரசாங்கம் அவர்கள் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்ற போதும் நாட்டு மக்களுக்கே தண்டனையை வழங்குகின்றது. வரி கொள்கையை அரசாங்கம் பின்பற்றுகின்றது. இதில் அசாதாரணமான வகையில் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சாதாரண மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் கூறுவதை அப்படியே செய்யத் தேவையில்லை. எங்களால் முடிந்தவாறு செய்யலாம். அப்படிச் செய்ய முடியாவிட்டால் சர்வதேச நாணய நிதியத்திற்கே நாட்டை கொடுத்து விடலாமே. எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியம் அரச வருமானத்தை அதிகரிக்குமாறே கேட்டுள்ளது. அதன்போது வரிகளை அதிகரிக்கும் போது செல்வந்தர்களுக்கான வரியை அறவிடவே கூறியுள்ளது. ஆனால் இவர்களுக்கு வரியை அறவிட நடவடிக்கை எடுக்காது பொதுமக்கள் மீது சுமைகளைச் சுமத்தியுள்ளது.

VAT வரி அதிகரிக்கும் போது அதற்கு ஆதரவாக கையுயர்த்தியவர்கள் இப்போது அதுபற்றி கதைக்கின்றனர். இந்த பாராளுமன்றத்தில் பொலிவூட், ஹொலிவூட்டில் இல்லாத நடிகர்கள் இருக்கின்றனர். அவர்களில் சிறந்த நடிகர் மஹிந்த ராஜபக்‌ஷவே ஆகும்.

அவர் முதலில் ஆதரவாகக் கையுயர்த்திவிட்டு, இப்போது வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு என்று தெரிவிக்கின்றார். ஆடை அணிந்துகொண்டா இந்த சபையிலிருந்து அதனை ஆதரித்தீர்கள் என்று கேட்கின்றேன்.

# 7 மணி 45 நிமிடம் கட்டாய கடமை

அதனைத் தொடர்ந்து, அரசு அலுவலகங்கள் பிற்பகல் 3:00 மணி வரை பணப் பரிவர்த்தனைக்காக திறந்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், பணியின் போது தனது அலுவலக அடையாள அட்டையை அணிந்துகொள்வதுடன் மேலும் சீருடை உதவித்தொகை பெறும் அனைத்து அரசு அலுவலர்களும் தங்களது சீருடைகளை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொது தினமாக ஒதுக்கப்பட்டுள்ள திங்கட்கிழமைகளில் அமைச்சின் கீழ்மட்ட அதிகாரி முதல் அமைச்சின் செயலாளர் வரை அனைத்து மட்டத்திலான அதிகாரிகளும் அலுவலகத்தில் தங்கியிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அந்நாளில் நோய் அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் தவிர வேறு காரணங்களுக்காக எந்த விடுமுறையும் அனுமதிக்கப்படவில்லை என்பதை நிறுவனத் தலைவர் உறுதி செய்ய வேண்டும். மற்றும் நாள்தோறும் பொதுமக்களிடம் இருந்து வரும் முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அனைத்து அரசு நிறுவனங்களின் விசாரணைச் சாளரங்கள், பணம் ஏற்றுக்கொள்ளும் சாளரங்கள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான சாளரங்கள் தொடர்ந்து திறந்து வைக்கப்பட வேண்டும் எனவும் வேலை நேரத்தில் மற்ற தனிப்பட்ட காரணங்களுக்காக வெளியே செல்லக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற வாடிக்கையாளர்கள் அலுவலகங்களுக்கு வருவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருந்தூர்மலை...

குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாகத் தெரிவித்துத் தொடரப்பட்ட வழக்கானது வியாழக்கிழமை (11) முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலே மேலதிக பதில் நீதிவான் த.கெங்காதரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழங்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை பிரதேசத்திலே நீதிமன்ற கட்டளையை நிறைவேற்றப்பட வேண்டும் என அமைதி வழியிலே போராட்டத்தை நடாத்திய அரசியல் வாதிகள், சமூக ஆர்வலர்கள் உள்ளடக்கிய நபர்களுக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட B/688/2022 வழக்கானது வியாழக்கிழமை (11) நீதிமன்றத்திலே எடுத்து கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின் போது முல்லைத்தீவு பொலிஸார் சட்டமா அதிபரிடம் மேலதிக ஆலோசனை பெற வேண்டும் என விண்ணப்பம் செய்திருந்தனர்.

வியாழக்கிழமை (11) சந்தேக நபர்கள், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் உட்பட ஐந்து நபர்களாக இணைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் சார்பிலே முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினை சார்ந்த அனைத்து சட்டத்தரணிகளும் ஆஜராகி நாங்கள் விண்ணப்பம் செய்திருந்தோம். குறித்த வழக்கானது பிழையாக தாக்கல் செய்யப்பட்ட அமைதி வழியிலே போராடிய அரசியல் வாதிகள் மற்றும் சமூக அக்கறையுள்ளவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கென மன்றிற்கு தெரிவித்திருந்தோம்” என தெரிவித்தார்.

## பரிசோதித்து அறிகையிட நீதிமன்றம் உத்தரவு

பின்னர் கிணற்று நீரில் மண்ணெண்ணெய் கலந்திருப்பது அதன் எரிப்பற்று நிலையினை உறுதிப்படுத்தப்பட்டு கிராம வாசிகளால் இது மண்ணெண்ணெய் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த வீட்டிற்கு சென்று வழக்கு பதிவுசெய்தனர்.

அதனையடுத்து கிணற்றில் மண்ணெண்ணெய் கலந்திருப்பது தொடர்பான வழக்கினை கடந்த செவ்வாய்க்கிழமை (09) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார்கள்.

இதன்போது குறித்த கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீரில் மண்ணெண்ணெய் கலந்திருப்பது தொடர்பாக கனியவள எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் கொடுத்து பரிசோதனை செய்து அதன் அறிக்கையினை 24.02.2024 அன்று நீதிமன்றிற்குச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# “சமஷ்டியால் நாட்டை கட்டியெழுப்ப முடியும்”



ஒற்றையாட்சியை கைவிட்டு சமஷ்டி அரசியலமைப்பை கொண்டு வர வேண்டும். அப்போதே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற நீதிமன்ற நியாயசபை மற்றும் நிறுவனங்களை அவமதித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வட மாகாணத்தில் கடற்றொழில் 14 வருடங்களாக மிக மோசமான அழிவுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றது. சட்ட ரீதியாக கடமைகளை செய்ய வேண்டிய கடப்பாடு கடற்றொழில் திணைக்களத்திற்கு உள்ளபோதும் அதனை சீர்செய்யாது அமைச்சரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தவறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

இங்கு விவாதிக்கப்படும் சட்டமூலங்களில் நீதிமன்ற நியாயசபை, நிறுவனத்தை அவமதித்தல், அட்ரோனி, நொத்தாரிசு சட்டமூலம் ஆகியன இங்கு நிறைவேற்றப்படவுள்ளது. பாதுகாப்பான மக்கள் வாழ்வுக்காகவே சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. எவ்வாறாயினும் இந்த சட்டங்கள் நாட்டில் வாழும் அனைவருக்கும் நம்பிக்கையளிக்கும் வகையில் உள்ளதா? தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இந்த சட்டங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது. தையிட்டியில் சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எந்த வகையில் குறித்த சட்டங்கள் தமிழ் மக்களுக்கு சாதகமாக உள்ளது.

இதேவேளை, மயிலத்தமடு, குருந்தூர்மலை, கொக்குத்தொடுவாய் ஆகிய விவகாரங்களில் இந்த சட்டங்கள் எவ்வாறு தமிழருக்கு பாதுகாப்பாக உள்ளது. தேசிய நல்லிணக்கம் ஐக்கியத்திற்காக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இங்கு தமிழ், சிங்கள அடிப்படையாக கொண்ட கட்சிகள் இருக்கக் கூடாது என்று அமைச்சர் கூறியுள்ளார். இங்கு இனப்பிரச்சினை உள்ளது அதனை மறுக்கக் கூடாது. தமிழருக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

அவற்றை பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலையை அரசாங்கம் நிகழ்த்தியுள்ளது.

அந்த உண்மைகளை ஏற்றுக்கொண்டு தமிழர்களுடன் புரிந்துணர்வுக்கு வர வேண்டும். ஒற்றையாட்சியை கைவிட்டு சமஷ்டி அரசியலமைப்பை கொண்டு வர வேண்டும். அப்போதே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என தெரிவித்துள்ளார்.

> **“ பாதுகாப்பான மக்கள் வாழ்வுக்காகவே சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்த சட்டங்கள் நாட்டில் வாழும் அனைவருக்கும் நம்பிக்கையளிக்கும் வகையில் உள்ளதா? தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இந்த சட்டங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது**

### பொலிஸ் காவலரண் மீது

# பெட்ரோல் குண்டு தாக்குதல்

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பொலிஸ் காவலரண் மீது இரு நபர்களால் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் புதன்கிழமை (10) பதிவாகியுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டு இருவரும் தப்பிச் செல்ல முயன்றபோது, பொலிஸார் துரத்தி சென்று, அவர்களை கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரியவந்துள்ளது.

மண்டைதீவு மற்றும் ஊர்காவற்துறையை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணத்தையும், தீவகத்தையும் இணைக்கும், மண்டைதீவு சந்தியில் பொலிஸ் காவலரண் காணப்படுவதனால் தீவக பகுதிகளில் இருந்து சட்டவிரோத இறைச்சிகள், போதைப்பொருட்கள் என்பவற்றை யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படுவது பெருமளவில் கட்டுப்படுத்தப்படிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு நாள் விடுமுறை

■ நூருல் ஹுதா உமர்



கல்முனை கல்வி வலய முஸ்லிம் பாடசாலைகள் வெள்ளிக்கிழமை (11) ஆரம்பமாக இருந்த நிலையில், அப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான அடைமழை மற்றும் வெள்ளநிலை காரணமாக வெள்ளிக்கிழமை (11) மற்றும் சனிக்கிழமை (12) ஆகிய தினங்களில் பாடசாலைகள் மூடப்பட்டு, மீண்டும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (16) வழமைபோன்று பாடசாலைகள் நடைவடிக்கைகள் இடம்பெறும் என கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த இரு விடுமுறை தினங்களுக்கும் பதிலாக 20 மற்றும் 27ஆம் சனிக்கிழமை நாட்களில் பாடசாலை நடைபெறவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### அம்பியுலன்ஸ் படகு வர தாமதமானதால்

# உயிரிழந்த இளைஞன்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - அனலை தீவு பகுதியில், உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அம்பியூலன்ஸ் படகு வர தாமதமாகியதால் இளைஞன் ஒருவர் புதன்கிழமை (10) உயிரிழந்துள்ளார்.

அனலைதீவை சேர்ந்த 23 வயதுடைய தர்சன் எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உழவு இயந்திரத்தில் இருந்து விழுந்து படுகாயமடைந்த இளைஞனை கடல் தாண்டி ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக அம்பியூலன்ஸ் படகுக்காக காத்திருந்தபோது, படகு வர தாமதமாகியதால் கடற்படையினரின் விரைவு படகின் மூலம் இளைஞனை ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது இளைஞன் உயிரிழந்துள்ளார்.

தீவகத்திற்கான வைத்திய வசதிகளைச் செய்து தருமாறு பல வருடங்களாக கோரிக்கையிட்டு வருகின்ற போதிலும், இன்னும் வைத்திய வசதிகள் செய்து தரப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வைத்திய வசதிகளைச் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# முதலைகளின் நடமாட்டத்தால் அச்சம்

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக அங்குள்ள நீர் நிலைகள் நிரம்பி வழிவதால் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதன்படி, மட்டக்களப்பு - கூழாவடி பகுதிக்குள் வியாழக்கிழமை (11) காலை முதலையொன்று புகுந்ததனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவர்கள் குறித்த முதலையை பிடித்து செல்லும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

இதேபோன்று, புதன்கிழமை (10) திருப்பழுகாமம் பகுதியில் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த முதலையொன்று மாடு ஒன்றை பிடித்துச்சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.




# 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழல் காணப்பட்ட 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நுணாவில் பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்தி ட்டம் முன்னெடுக்கப்பட்டபோது, 129 இடங்கள் டெங்கு பரவுவதற்கு- ஏதுவான இடங்களாக-இனம் காணப்பட்ட நிலையில், 24 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.



# இந்தோனேசிய தூதுவரை சந்தித்தார் அமைச்சர் ஜீவன்

இந்தோனோசியாவில் நடைபெறவுள்ள நீர் சம்பந்தமான சர்வதேச மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் தேவி குஸ்டினா டாபிங் அமைச்சரை கொள்ளுபிட்டியவில் உள்ள அமைச்சில் வைத்து புதன்கிழமை (10) சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போதே மேற்படி அழைப்பை விடுத்துள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தல் மற்றும் அரசியல், பொருளாதார காரணிகள் தொடர்பிலும் இருவருக்கும் இடையில் கருத்தாடல் இடம்பெற்றுள்ளது.

அதேபோல தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், கொள்கை ரீதியில் ஏற்படவுள்ள மாற்றங்கள், எதிர்கால வேலைத்திட்டங்களுக்கான வியூகங்கள் தொடர்பில் அமைச்சர் இதன்போது தூதுவருக்கு விளக்கமளித்துள்ளார்.

அனைவருக்கும் சுகாதார பாதுகாப்புடன் குடிநீரை தடையின்றி வழங்குவதற்காகவும், நீர் கட்டமைப்பை ஒரு பொறிமுறைக்குள் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டம் பற்றியும் தூதுவரிடம் அமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.

மேலும், மலையக பெருந்தோட்ட பகுதிகளின் நிலைவரம், அதனை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள், அதற்கு இந்தோனேசியா எவ்வாறு பங்களிப்பு வழங்கலாம் என்பன பற்றியும் விரிவாக கலந்துரையாடப் பட்டுள்ளது.

# ஐஸுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

■ அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போது ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் புதன்கிழமை (10) கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளை, யுக்திய திட்டத்திற்கமைய கிடைக்கப்பெற்ற தகவலின்படி, வில்கம் விகாரை பகுதியில் வைத்து சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை திருகோணமலை- உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ரயில் சேவை ரத்து

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மட்டக்களப்புக்கான ரயில் சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு - கொழும்பு ரயில்வே வழித் தடத்தில் வெலிக்கந்தைக்கும் புணாணைக்கும் இடைப்பட்ட பகுதியில் வெள்ள நீர் கரை புரண்டு பாய்வதால் புகையிரதம் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதன்கிழமை (10) இரவு கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் இரவு நேர அஞ்சல் ரயிலும், இரவு 07.15 க்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் செல்லும் அஞ்சல் ரயிலும் புறப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




### கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட

# மூவருக்கும் தண்டம் விதிப்பு

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட மூவருக்கு 27,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் 5 மில்லி கிராம் கஞ்சா உடமையில் வைத்திருந்த 2 பேரைக் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார், அவர்களுக்கு எதிராக வழக்குகளைப் பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தனித்தனியாகப் புதன்கிழமை (10) ஆஜர்படுத்தியபோது, தலா பத்தாயிரம் ரூபாய் படி இருவருக்கும் இருபதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, 6 மில்லி கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது ஏழாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

# மரம் விழுந்ததில் இரு வீடுகளுக்கு பலத்த சேதம்

■ செ.திவாகரன்



நானுஓயா - டெஸ்போட் (சீனிக்கத்தாளை) பகுதியில் செவ்வாய்க்கிழமை (09) இரவு மரமொன்று அடியோடு சரிந்து விழுந்தமையால் இரு வீடுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது வீடுகளின் மேற்கூரை நொறுங்கி, வீட்டினுள் இருந்த பொருட்கள் சேதமடைந்துள்ளதுடன், வீடுகளில் யாரும் இல்லாததால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகளை அப்பகுதிக்கு பொறுப்பான கிராமசேவகர் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் நுவரெலியா பிரதேச சபை மற்றும் நுவரெலியா மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சிறு விளம்பரம்**

எதுல்கோட்டே பிரதான வீதிக்கு அருகில் வீடு மற்றும் வியாபார பாவனைக்கு ஏற்ற கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு. 3,500,000 - 5,000,000
தொடர்புக்கு - 075-9123031

# நடுவீதியில் சாதாரண மக்கள்; நடுக்கடலில் மக்கள் பிரதிநிதிகள்

தலைநிமிர முடியாத அளவுக்கு மக்கள் நடுவீதியில் இழுத்து வீசப்பட்டுள்ளனர். அந்தளவுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உட்பட சேவைகளின் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமையால், பல வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால், நடுவீதியிலேயே தங்களுடைய இரவை கழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், முறையான பொருளாதார திட்டமின்மையால், நாட்டை பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டுச்சென்ற அரசியல்வாதிகளில் பலர், நடுக்கடலில் உல்லாச பயணத்தை மேற்கொண்டு, அங்கு வாய்க்கு ருசியான உணவுகளை உண்டு மகிழ்ந்துள்ளனர்.

எனினும், பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிப்புக்குப் பின்னர், வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) பெற்றுக்கொள்ளாவிடில், பெப்ரவரி முதலாம் திகதி முதல், 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்படுமென அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த (TIN) எண்ணை பெற்றுக்கொள்வதற்கான காலத்தை நீடிப்பதற்கு நிதியமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அது சிறந்த முடிவாகும்.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஹன்சகாவா மற்றும் தியகாவுல்லா என்ற இரண்டு சிறிய கப்பல்களில் 50க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் செவ்வாய்க்கிழமை (09) உல்லாசப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். மக்கள் பெரும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், கடலில் பார்ட்டி வைத்துள்ளனர் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) குற்றஞ்சாட்டினார்.

இலங்கை துறைமுக அதிகாரசபை இந்த இரண்டு சிறிய இழுவைப் படகுகளையும் ஒதுக்கியுள்ளதுடன், இவற்றில் சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து உணவு மற்றும் குளிர்பானங்களையும் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐம்பது பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இன்ப பயணத்திற்காகத் துறைமுக அதிகாரசபை 25 இலட்சம் ரூபாவிற்கு மேல் செலவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு மரக்கறியைக் கூட கொள்வனவு செய்து கொள்ள முடியாத நிலைமைக்குள் நாடு இருக்கின்றன நிலையில், மக்களின் பிரதிநிதிகள் நடுக்கடலில் உல்லாச சுற்றுலா சென்றுள்ளனர்.

விடுமுறையில் யாரும் சுற்றுலா செல்லலாம். எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். அதனைப் பற்றி யாரும் கவலைகொள்ள வேண்டிய தேவையில்லை. எனினும், பாராளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் பங்குபற்றிய இந்த இன்ப சுற்றுலாவுக்கான செலவு துறைமுக அதிகார சபையினால் செலுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணம் மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணமாகும்.

வரிக்கு மேல் வரியை விதித்து, மக்களைத் துன்பத்துக்குள் தள்ளிவிட்டிருக்கும் அரசாங்கமும், மக்கள் பிரதிநிதிகளும் மக்களின் வரிப்பணத்தில் இன்ப சுற்றுலா சென்றிருப்பது. மக்களை ஆத்திரமூட்டும் செயற்பாடாகும். இன்ப சுற்றுலாவில் பங்கேற்றிருந்த 50 எம்.பிக்களும் தங்களுடைய சொந்த பணத்தில், சென்றிருந்தால் யாருக்கும் கவலையில்லை.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

உயிர்களை நேசிப்பது, முழு உலகுடன் தோழமை கொள்வது போலாகும். நாங்கள் எவருக்கும் எதிரிகள் அல்ல, தீயவர் பேச்சுகளைக் கண்டுகொள்வதுமில்லை. இதுபோன்ற உறுதிமொழிகளை நெஞ்சில் நிறைத்துக்கொண்டு, யாவரும் எம்மவர்கள் எனும் கொள்கையின் பாதையில் பயணித்திட வேண்டும்.

பலமில்லாத அடித்தட்டு மக்களை, உயர்த்தாதவரை உலகம் செயல் குறைந்த நிலையிலேயே இருக்கும். இன்னமும் எல்லா நாடுகளிலும் மக்கள் பொருளாதார சமநிலையில், மக்கள் பொருளாதார வசதி உடையவர்களாக இல்லை.

மக்களை நேசிக்காதவர்களை உலகப் பிரஜை என கூற முடியாது. இத்தகையவர்கள் வையகத்தில் இருந்து, தாமாகவே விலகியவர்களாகவும் விலக்கப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

நாகரிகம் வளர்ந்து விட்டதாகச் சொல்லுகின்றோம். மக்களை நேசிக்காத நாகரிகத்தால் முழுமையே இல்லை. புறவாழ்வில் பகட்டாக நடித்தல், தன்னைத்தான் அவமதித்தல் போலாகும்.

இன்று, வாழும் உரிமை, சுதந்திரம் பல நாடுகளின் மக்களுக்கு இல்லாமல் போவது அச்சத்தையூட்டுகின்றது. மனிதாபிமானம் மகாதர்மம். இதை உணர்வது நலம்.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அடிக்கடி பழுதடையும் பேருந்துகள்

கிளிநொச்சி-பூநகரி முக்கொம்பன் கிராமத்திற்கான பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக வீதிகளில் நீண்ட நேரம் பயணிகள் காத்திருக்க வேண்டி உள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, 600 குடும்பங்கள் வாழ்கின்ற குறித்த கிராமத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளே பணியில் ஈடுபடுகின்றன.

இக்கிராமத்திற்கு செல்லும் பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக நீண்ட நேரம் பயணிகள் காத்திருக்க வேண்டிஉள்ளது.

ஏற்கெனவே பூநகரி அரசபுரம், நேரடம்பன் வழியாக முக்கொம்பன் வரை செல்லும் பேருந்து சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

10ஆம் கட்டை வழியாக முக்கொம்பனுக்கு செல்லும் பேருந்து சேவைகளும் ஒழுங்காக நடைபெறுவதில்லை என முக்கொம்பன் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக முக்கொம்பன் மக்கள் பூநகரி வைத்தியசாலை, பிரதேச செயலகம் என்பவற்றிற்கு சென்று வருவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாகவும்,

இது தொடர்பாக கடந்த காலங்களில் மாவட்டச் செயலாளர், பூநகரி பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மனுக்கள் கையளித்தும் தமது கிராமத்திற்கான ஒழுங்கான போக்குவரத்து சேவை நடைபெறுவதில்லை எனவும் இக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்





தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 35:

## டட்லி-செல்வா ஒப்பந்தம்: தெரிந்தே செய்த வினை

**சேனாநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையில், மாவட்ட சபைகளுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டவில்லை**

1964 டிசெம்பரில் சிறிமா பண்டாரநாயக்க பாராளுமன்றத்தைக் கலைத்தார். 1965இல் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் அவை ஆட்சியமைக்கப் போதுமானவையல்ல என்பதை டட்லி சேனாநாயக்க நன்கறிந்திருந்தார். இதனால் அவர் ஒரு பரந்துபட்ட கூட்டணிக்கான முயற்சிகளை எடுத்தார். இக்காலப்பகுதிக்கு சற்றுமுன் வரை தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தது. இதனை நன்கறிந்திருந்த சேனாநாயக்க எப்படியாவது தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதை தடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

சத்தியாகிரகத்தின் தோல்வியைத் தொடர்ந்து திக்கற்ற ஒன்றாகத் தமிழரசுக் கட்சி இருந்தது. இக்கட்டத்திலேயே தமிழரசுக் கட்சியை சேனாநாயக்க பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். டட்லி சேனநாயக்காவுக்கும் செல்வநாயகத்துக்கும் தொடர் சந்திப்புகள் இடம்பெற்றன. டட்லி அரசாங்கத்தை அமைத்தால் தமிழரசுக் கட்சியின் ஆதரவை விரும்பினார். தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தேடித் தரவில்லை என்ற எண்ணம் தமிழர்களிடையே இருந்தது. அதேவேளை, பண்டா-செல்வா உடன்படிக்கையை இல்லாமல் செய்வதில் டட்லி தலைமைப் பாத்திரம் வகித்தார் என்பதும் தமிழர்களுக்குத் தீர்வை வழங்குவதை அவர் தொடர்ச்சியாக எதிர்த்தும் வந்தவர் என்பதும் முக்கியமானது.

இருந்தாலும் செல்வநாயகம் பேச்சுவார்த்தைக்கு இணங்கினார். அதனிலும் மேலாகப் பண்டா-செல்வா உடன்படிக்கையில் உள்ள விடயங்களை விட மிகக் குறைவான விடயங்களை உள்ளடக்கிய கோரிக்கையை முன்வைத்தார். அதற்கு டட்லி உடன்படவில்லை. சற்றே மாற்றியமைக்கப்பட்ட ஒரு திட்டத்திற்கு அவர் உடன்பட்டார். இது ஒரு இரசிய உடன்படிக்கையாக அமைந்தது. 1965இல் கைச்சாத்திடப்பட்ட சேனநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையின் (டட்லி-செல்வா ஒப்பந்தம்) மைய அம்சம், பிரதிநிதித்துவ அதிகாரங்களைக் கொண்ட மாவட்ட சபைகளை ஸ்தாபிப்பதாகும். அதேவேளை, தமிழ் மொழியின் பயன்பாடு தொடர்பாகவும் சில விடயங்கள் இவ்வுடன்பாட்டில் இருந்தன. தமிழ் மொழியை வடக்குக் கிழக்கில் நிர்வாக மொழியாகவும் பதிவு செய்யும் மொழியாகவும் மாற்றுவதற்கு புதிய விதிமுறைகளை உருவாக்க சேனநாயக்க ஒப்புக்கொண்டார்.

நாடு முழுவதும் தமிழ் பேசும் மக்கள் அதிகாரபூர்வ மற்றும் பிற வணிகங்களைத் தமிழில் பரிவர்த்தனை செய்ய விதிமுறைகளில் வழிவகை செய்யப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஆங்கிலத்திற்குப் பதிலாகச் சிங்கள மொழிக்கான 1961ஆம் ஆண்டு நீதிமன்ற மொழிச் சட்டத்தைத் திருத்துவதற்கும் சேனநாயக்க ஒப்புக்கொண்டார். குடியேற்றம் மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் முதற்கட்டமாக இரு மாகாணங்களின் மாவட்டங்களில் உள்ள காணியற்ற குடியிருப்பாளர்களுக்கும், பின்னர் இரு மாகாணங்களிலும் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கும், இறுதியாக மற்ற குடிமக்கள், தீவின் மற்ற பகுதிகளில் வசிக்கும் தமிழ் குடிமக்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் உடன்பாடு எட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் விதிகள், தமிழரசுக் கட்சியின் குழப்பகரமான அரசியல் நிலைப்பாட்டைக் காட்டி நின்றது. பண்டா-செல்வா உடன்படிக்கையின் போதும் அதன் பின்னரான தமிழரசுக் கட்சிக் கூட்டங்கள், மாநாடுகளில் தமிழர் உரிமை தொடர்பான இறுக்கமான நிலைப்பாட்டைப் பின்பற்றுவதாகக் காட்டிக்கொண்ட தமிழரசுக் கட்சியின் இவ்வுடன்படிக்கையில் தனது இயலாமையை வெளிப்படுத்தியது. இதனால் தமிழரசுக் கட்சி இவ்வுடன்பாட்டை இரகசியமாகப் பேண விரும்பியது. மறுபுறம் சிங்கள இனவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்திருந்த டட்லிக்கும் இது வசதியாகப் போனது.

இரு தரப்பிலும் இருந்த உயர்வர்க்க நபர்களே இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இனத்துவத்தை மீறிய வர்க்க உறவுகள் அவர்களிடம் இருந்தது. தமிழரசுக் கட்சியும் தங்கள் வர்க்க சகாக்களான ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வருவதையே விரும்பியது. இந்தப் பின்புலத்தில் இவ்வுடன்படிக்கை சார்ந்து சில விடயங்களை நோக்க வேண்டியுள்ளது.

சேனநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கையானது பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் இருந்த பிராந்திய சபைகளுக்குப் பதிலாக மாவட்ட சபைகளை மாற்றியது. ‘பிராந்திய’ என்ற சொல் தெளிவாகச் சுயாட்சியைக் குறிக்கிறது. இதனால் இதை டட்லி சேனாநாயக்கவால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உள்ளாட்சி நிர்வாகத்தின் நடைமுறையில் உள்ள அலகான ‘மாவட்டம்’ என்று மாற்றப்பட்டன. பிராந்திய சபைகள் வடக்கு மற்றும் கிழக்கின் புவியியல் ரீதியாக இணைந்த தமிழ் பகுதிகளைக் குறிப்பிட்டு, ‘மாகாண எல்லைக்கு அப்பால்’ ஒன்றிணைப்பதற்கான ஏற்பாடுகளைப் பண்டா-செல்வா ஒப்பந்தம் கொண்டிருந்தது. ஆனால், மாவட்ட சபைகள் அரசியல் கலாசார ஒற்றுமை இல்லாமல், துண்டு துண்டாக இருக்க வேண்டும். ஆயினும்கூட, இது தமிழரசுக் கட்சிக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மாறியது. இது இரண்டு விடயங்களைத் தெளிவாகக் காட்டியது. தமிழருக்கு எதை வழங்க இயலாது என்பதில் சிங்கள அரசுத் தலைவர்கள் உறுதியாக இருந்தார்கள். மறுபுறம் தமிழரசுக் கட்சி தமிழருக்கு அவசியமான தீர்வு என்பதில் உறுதியின்றியும் அக்கறையின்றியும் இருந்தது.

இது குறித்துப் பல நாடுகளில் நீதிபதியாக இருந்த சச்சி பொன்னம்பலம் தனது *‘Sri Lanka : The National Question and the Tamil Liberation Struggle’* என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

‘பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையானது, இந்திய அரசியலமைப்பின் கீழ் மாநிலங்களுக்கு, நைஜீரிய கூட்டாட்சி அமைப்பின் கீழ் அல்லது கனேடிய அரசியலமைப்பின் கீழ் உள்ள மாகாணங்களுக்கு வழங்கப்பட்டதை விட பரந்த மற்றும் விரிவான அதிகாரப் பகிர்வு பகுதிகளைக் கொண்டிருந்தது. ஆனால், சேனாநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையில், மாவட்ட சபைகளுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டவில்லை. குறைந்தபட்சம் அதுகுறித்த குறிப்பு கூட இல்லை. மாவட்ட சபைகளின் பெயரால் எதுவுமற்ற வெற்றுக் கோதுக்கு தமிழரசுக் கட்சி எப்படி இழிவான முறையில் ஒப்புக்கொண்டிருக்க முடியும்?’

இந்தக் காரணங்களாலேயே தமிழ்த்தேசிய அரசியல் பரப்பில் பண்டா-செல்வா உடன்படிக்கை பேசப்படும் அளவுக்கு டட்லி-செல்வா உடன்படிக்கை பேசப்படவில்லை. இவ்விடத்தில் பண்டாரநாயக்க உடன்பட்டதைக் கூட கருத்தில் எடுக்க சேனாநாயக்க தயாராக இருக்கவில்லை என்பது சிங்களத் தேசியவாதத்தின் அகங்காரம் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரானதாக ஒரு தசாப்தகாலத்தில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதைக் காட்டும் நல்லதொரு குறி காட்டி.

தமிழரசுக் கட்சியின் அரசியல் சொல்லாடல்கள் தமிழ் அரசு (அரசாங்கம்) என்ற அடிப்படையிலேயே முதலில் இருந்து இருந்து வந்தது. இதனால் ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி (Federal Party) என்றும் தமிழில் தமிழரசுக் கட்சி என்று பெயர்சூட்டி கபடத்தனத்தை தமிழரசுக் கட்சித் தலைவர்களும் செல்வநாயகமும் வெளிப்படுத்தினார். இந்த ஏமாற்றின் வழியே தமிழ் காங்கிரஸுக்குப் போட்டியாக வாக்குகளைத் தேடித் தேர்தலில் வெற்றி பெற்று வந்தனர். கூட்டாட்சி மற்றும் தமிழ் அரசு பற்றிய கற்பனாவாதக் கருத்துக்களால் தமிழ் மக்களைக் கவர்ந்த தமிழரசுக் கட்சியால் அவர்களது அரசியல் எஜமானர்களுடன் பேரம் பேசி, அதிகாரப் பகிர்வின் எளிமையான வடிவங்களைப் பெற முடியாமல் போனது.

சச்சி பொன்னம்பலம் இந்த உடன்படிக்கை குறித்து இன்னொரு விடயத்தையும் குறிப்பிடுகிறார்:

‘புதிய உடன்படிக்கையில் உள்ள குடியேற்றம் மற்றும் மீள்குடியேற்ற ஏற்பாடுகள் தற்போதைய நடைமுறையின் தோராயமான விளிம்புகளை மழுங்கடித்தது. இங்கும், தமிழ் மக்களுக்கான பிரத்தியேகமான பிரதேசங்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான அடிப்படைத் தேவையிலிருந்து தமிழரசுக் கட்சி பின்வாங்கியது. டி.எஸ் சேனநாயக்காவின் காணி உரிமைக்கான குடியுரிமைத் தகுதியை அறிமுகப்படுத்துவதற்கும் அது ஒப்புக்கொண்டது, இதன் மூலம் தமிழர் தாயகத்தில் அரசாங்கத்திடம் இருந்து காணியைப் பெறுவதற்கான உரிமை இந்தியத் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டது.’

இந்தப் பின்புலத்திலேயே இவ்வுடன்படிக்கையை நோக்க வேண்டும். 1965 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஏழு கட்சிகளைக் கொண்ட கூட்ரசாங்கத்தை நிறுவியது. இதில் பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும், தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவும் பச்சை இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக்க ஆகியோரும் இருந்தனர். இவர்களை விட, யூஎன்.பிக்குள்ளும் தீவிரமான சிங்கள இனவாதிகள் இருந்தனர்.

இப்படிப்பட்ட ஒரு அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் எனத் தமிழரசுக் கட்சி தமிழரை நம்பவைத்தது. இன்னும் சரியாகச் சொல்வதானால் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இன்றுபோல் அன்றும் முட்டாளாக்கப்பட்டார்கள்.

## New Anthoney's Farms க்கு

# FSSC 22000 சான்றிதழ்



கோழி இறைச்சி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள New Anthoney's Farms, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெருமைக்குரிய சான்றிதழான FSSC 22000 ஐப் பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது கோழி இறைச்சி உற்பத்தியாளராகத் திகழ்கின்றது.

இந்த தரச் சான்றிதழைப் பெற்றுள்ளதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு சந்தையில் காணப்படும் பாதுகாப்பான கோழி இறைச்சியை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் நியமத்தை மேம்படுத்தி, நியமத்துக்கு அப்பால் செல்லும் வகையில் New Anthoney's Farms அமைந்துள்ளது.

FSSC 22000 சான்றிதழை பெற்றுக் கொண்டதனூடாக, புதிய தொழிற்துறை நியமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், கோழி இறைச்சித் துறையில் தரம், பாதுகாப்பு மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றில் உயர் நியமத்தை உறுதி செய்துள்ளது. அத்துடன் இதர கோழி இறைச்சி உற்பத்தியாளர்களையும் தம்மைப் பின்தொடர்ந்து விநியோகத் தொடரில் தரத்தை மேம்படுத்தவும், நம்பிக்கையை கட்டியெழுப்பவும் அழைக்கின்றது.

New Anthoney's Farms (Pvt) Ltd இன் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர அணியினருக்கும், பங்காளர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் இந்த செயன்முறைக்கு ஆதரவளித்தமைக்காக நன்றியை தெரிவித்திருந்தார். சந்தையில் உயர் நியமத்திலமைந்த கோழி இறைச்சி தயாரிப்புகளை தொடர்ந்தும் வகையில் புதிய நியமத்தை ஏற்படுத்த அவர் எதிர்பார்க்கின்றார். இந்த சான்றிதழைப் பெற்றுக் கொள்வதில் SGS லங்கா முக்கிய பங்காற்றியிருந்தது.

தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் உயர் நியமங்களை பின்பற்றுகின்றமையினால், Anthoney's தயாரிப்புத் தெரிவுகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தற்போது மேலும் நம்பிக்கை கொள்ள முடியும். FSSC 22000 சான்றிதழ் என்பதனூடாக, உள்நாட்டில் வர்த்தக நாமம் மேம்படுத்தப்படுவது மாத்திரமன்றி, ஏற்றுமதி அதிகரிப்பை வழங்கி, சர்வதேச சந்தைகளுக்கு New Anthoney's Farms சென்றடைவை விரிவாக்கம் செய்வதிலும் பங்களிப்பு வழங்குகின்றது.

ஒழுக்கமான மற்றும் நிலைபேறான செயன்முறைகளை பின்பற்றுவதில் New Anthoney's Group முன்னிலையில் திகழ்கின்றது. கடந்த ஆண்டில், பெருமைக்குரிய 'Sustainable U.S. Soy' இலச்சினையை தமது பொதிகளில் பதிவதற்கான அங்கிகாரத்தைப் பெற்றிருந்தது. அதனூடாக நிலைபேறான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், தெற்காசிய மற்றும் உப-சஹாரா ஆபிரிக்க பிராந்தியத்தின் முதலாவது நிறுவனமாகவும் திகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து மேலும் பல நிறுவனங்கள் பின்தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## CSSL National CIO பட்டியல் 2023 இல்

# பவர் நிறுவனத்தின் அனோஜா பஸ்நாயக்க



**பல மூலோபாய டிஜிட்டல் மாற்றியமைப்புத் திட்டங்களுக்கு இவர் தலைமைத்தும் அளித்துள்ளதுடன், பவர் நிறுவனத்தில் செயற்திட்ட பணிப்பாளராக இவர் முக்கிய பங்காற்றியிருந்தார்**

இலங்கையின் தொழில்நுட்பத் துறைக்கு ஒப்பற்ற அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு வழங்கியிருந்தமையை கௌரவிக்கும் வகையில், பவர் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க, இலங்கை கணனி சங்கத்தின் National CIO பட்டியல் 2023 இல் உள்வாங்கப்பட்டிருந்தார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்பாட்டாளர்களின் பிரதான நிபுணத்துவ அமைப்பான இலங்கை கணனி சங்கத்தினால் (CSSL) முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய CIO பட்டியல் அறிமுக நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தொழிற்துறையின் முன்னணி மற்றும் புகழ்பெற்ற நிபுணர்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. CIO இன் பணி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், உலகளாவிய ரீதியில் சகல துறைகளிலும், டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணம் முன்னெடுக்கப்படும் நிலையில், உதவி பணிநிலை என்பதிலிருந்து மூலோபாய பணிநிலையாக மாற்றமடைந்து வருகின்றது. தேசிய ரீதியில் CIO களை தெரிவு செய்யும்போது, முன்னெடுக்கப்பட்டிருந்த மதிப்பாய்வு அளவீட்டு தெரிவில் இது பிரதிபலிக்கப்பட்டிருந்தது.

பவர் நிறுவனத்தில் அனோஜா 2008 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப முகாமையாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அதற்கு முன்னர் Brandix, PricewaterhouseCoopers மற்றும் Hayleys ஆகிய நிறுவனங்களில் பணியாற்றியிருந்தார். பல மூலோபாய டிஜிட்டல் மாற்றியமைப்புத் திட்டங்களுக்கு இவர் தலைமைத்துவம் அளித்துள்ளார். பவர் நிறுவனத்தில் செயற்திட்ட பணிப்பாளராக இவர் முக்கிய பங்காற்றியிருந்தார். SAP Analytics Cloud Live அறிக்கையிடலுடன், cloud deployment இல் SAP S/4 HANA 2020 ஐ நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்கு மாற்றம் செய்தல் போன்றவற்றில் இவர் முக்கிய பங்காற்றியிருந்தார். அக்காலப்பகுதியில் இலங்கையில் இந்தத் திட்டத்தை பின்பற்றிய முதல் நிறுவனமாக பவர் திகழ்ந்தது.

இதனூடாக RISE ABC திட்டத்துக்கு நிறுவனத்தின் டிஜிட்டல் பிரசன்னத்தை விரிவாக்கம் செய்ய வழிகோலியிருந்ததுடன், அதன் செயற்பாட்டு செயன்முறையை செம்மையாக்கம் செய்திருந்ததனூடாகவும், உரிய காலப்பகுதியில் புத்தாக்கமான தீர்வுகளை நிறுவியிருந்ததனூடாகவும் ஒட்டுமொத்த பெறுமதி ஒதுக்கீட்டை மேம்படுத்தியிருந்தது. AI, ML ஆற்றல்களை உள்வைக்கப்பட்ட S/4 HANA உடனான டிஜிட்டல் அடித்தளத்தை நிறுவுவதற்கும் ஏதுவாக அமைந்திருந்தது.

25 வருடங்களுக்கு மேலாக நிர்வாக மற்றும் தொழில்நுட்ப நிலைகளில் அனுபவத்தைக் கொண்டுள்ள இவர், மாற்றம் மற்றும் நவீனமயமாக்கம் ஆகியவற்றில் நிபுணத்துவத்தை ஏற்படுத்தல், நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுதலை ஊக்குவித்தல் போன்றவற்றுக்கு பிரதான பங்களிப்பை வழங்குகின்றார். செயற்திட்ட முகாமைத்துவ கல்வியகத்தின், USA கொழும்பு பிரிவின், நிபுணத்துவ விருத்தி உப தலைவராக அனோஜா திகழ்வதுடன், சான்றளிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ நிபுணராகவும் (PMP) விளங்குகின்றார். இலங்கை பணிப்பாளர்கள் நிறுவகத்தின் (SLID) அங்கத்தவராகவும் இவர் திகழ்கின்றார். SLID இன் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப கழகத்தின் அங்கத்தவராகவும் இவர் திகழ்கின்றார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பொது முகாமைத்துவ நிகழ்ச்சி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணனி விஞ்ஞானம் இளமானி (விசேட) பட்டத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# என் வாழ்வு



வாழ்வில் என்றுமே
இல்லாதவாறு
ஓர் அடகுக்கடை
மனநிலை என்னை
ஆக்கிரமித்தது
திடீரென என்
மனப்பெட்டகத்தை
திறக்கிறேன்
சீராக அடுக்கப்பட்ட
கோப்புக்கள்
நிரல் நிரலாக
நெஞ்சமெல்லாம்
நிரம்பி இருக்கிறது
சேமிப்பு கணக்கை
திறந்து பார்க்கிறேன்
சேமிக்கப்பட்டவை
எல்லாவற்றையும்
ஒவ்வொன்றாக
வரிசைப்படுத்துகிறேன்
என்னுடைய கோப்புகள்
எங்கிருக்கிருக்குமோ?
அங்கிருக்கும் என் வாழ்வு.

இரவிகாந்தன்
திருகோணமலை



# வானில் ஒரு பயணம்

சோகப் பறவைகளே
உயர பறப்பீர்
சோகம் மறந்து
வான்பயணம் தொடர்வீர்
வானம் வழிவிடும்
வாழ்த்திடுவாள்
இயற்கை இறைவி

வேண்டாம் என்று விலகி வேகம்
குறைந்து செல்லாமல்
விழிகள் திறந்து விரைந்து வாரீர்
விடிவெள்ளி வெளிச்சம் பாரீர்
துணிச்சல் கொண்டு எழுவீர்
துன்பஇருள் மயம் நீங்குது
காண்பீர்

சுழல் காற்று பின் தொடர்ந்தும்
வெற்றி பயணப் பாதையில்
சுமைகளை இறக்கி
வானில் சுதந்திரமாய் பறப்பீர்

வான் வெளி இயற்கை அழகு
உம்மோடு பயணம் செய்ய
ஆசை கொண்டு இறக்கைகளை
சில நிமிடம் கேட்குதே!

ஆஷா அனஸ்டின்





# திருசிய சிகப்பு ஒட்டிய வளையல்

முந்தைய பொழுதொன்றில்
பேரண்டமாய்
ஒரு நிலவு
கிடைத்திட்ட வேளை
முளைத்திட்ட ஒன்று

இரவினை
புயல் கொண்டாடி
தீர்த்திருந்த நாளில்
பறத்தலை நிறுத்தியிருந்தது
பறவை

தூரமாக
நானும் நாணமும்
நனைந்து கொள்ள

கடிகார சாளரத்தில்
காற்றின் திவலை

உலர்தல்
இனி
இறக்கைக்கு
இன்னொரு பிறப்பு

திருமலை சிட்டு
அ.விமலஷாந்தன்



# மலையை பிரசவிக்க வேண்டும்





ஒரு நதி
உருவாகி
கடல் சேர
காடுகள் பெருகி
உயிர்கள் வாழ

ஒரு பெரும் மலையை
பிரசவிக்க வேண்டும்.

சிந்தனை கண்கள்
மூடிய தேசத்தில்

ஆணாகி
பெண்ணாகி
அரசாகி
இராணுவ படையாகி

இதோ
ஒரு மலையை பிரசவிக்கிறேன்.

பிரசவ மயக்கம்
தெளியும் வரை
என் மகா மலையை
யார்தான் பாதுகாப்பது.

காரையன் கதன்

# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :..........................................
மாகாணம் :....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர்** :..............................................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை** :..............................................................................................

**மாகாணம்** :..............................................................................................

**வீட்டு முகவரி** :..............................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர்** :......................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்** :..........................................................


**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் .......................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

...............................................
அதிபரின் கையொப்பம்

## தெளிவத்தை ஜோசப் கதைகளின் முழுத் தொகுப்பு :சில குறிப்புகள்


# அருங்களஞ்சியமாகும்





**கதைகளைச் சேர்த்து, தொகுப்பைக் கொண்டுவந்து விடலாம் என்று முனைந்தபோதுதான், தேடியேயாகவேண்டிய கதைகளின் பட்டியல் கவலையைத் தந்தது**

**தெளிவத்தை ஜோசப் மீது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் வாஞ்சை கொண்டிருந்த விக்ரமசிங்க, இந்தச் சிறுகதைத் தொகுப்பாக்க முயற்சியைத் தனது சொந்த பணியாக கருதி செயலில் இறங்கினார்**

**பிறரது நூல்களுக்காக விக்ரமசிங்க சுமக்கும் சிலுவை இது. அலைச்சலையும் உழைப்பினையும் துணிச்சலையும் வேண்டி நிற்கும் பயணம் இது**


தெளிவத்தை ஜோசப்


கோ.ஒளிவண்ணன்


எச்.எச்.விக்ரமசிங்க

**தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் அனைத்தையும் தொகுத்து, முழுமையான தொகுப்பு ஒன்றினைக் கொண்டுவரும் முயற்சி பத்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது. 1979இல் யாழ்ப்பாணத்திலிருந்து வைகறை வெளியீட்டின் மூலம் தெளிவத்தை ஜோசப்பின் முதலாவது சிறுகதைத் தொகுப்பினை 'நாமிருக்கும் நாடே' என்ற தலைப்பில் வெளியிட்டதன் நீட்சி போலவும் இது அமைந்தது.**

'நாமிருக்கும் நாடே' என்ற தொகுப்பிற்காக அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்து பேருழைப்பை நல்கிய சிவம் கமலநாதன், எஸ்.பாலசுப்ரமணியம் ஆகியோரின் மறைவினைக் கண்ணீரோடு நினைவு கூர்கிறேன். அவுஸ்திரேலியாவில் வாழும் மூக்கையா நடராஜா, கனடாவில் வாழும் முன்னாள் வீரகேசரி ஆசிரியர் வி.தேவராஜ் ஆகியோர் இன்றும் எம் முயற்சிக்குத் தொடர்ந்து ஊக்கம் தந்து வருகின்றனர்.

தன்னை நாடி வரும் அனைத்து எழுத்தாளர்களுக்கும், அவர்களின் கைவசம் இல்லாத கதைகளை எல்லாம் தனது சேகரத்திலிருந்து தேடிக்கொடுத்துதவிய தெளிவத்தை ஜோசப் அவர்களிடம் அவர் எழுதிய கதைகளே இல்லாமல் போனது துரதிர்ஷ்டவசமானது.

'நாமிருக்கும் நாடே' (1979) என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கூனல், சிலுவை, ஒரு தோட்டத்துப் பையன்கள் படம் பார்க்கப் போகிறார்கள் ஆகிய கதைகள் வெளியான இதழ்கள், பத்திரிகைகள் என்பன அழிந்துபோய்விட்டதென்றே கூறவேண்டும்.

குறிப்பாக, பதுளையில் வெளியான 'அல்லி' சஞ்சிகை பதுளைக்குள்ளேயே உலவிய, சில இதழ்களே வெளியாகி நின்றுபோன நிலையில், அந்த சஞ்சிகையை ஒரு பதினான்கு ஆண்டுகள் கழித்துத் தேட முனைந்தபோது, அதனை எங்குமே பெற்றுக் கொள்ளமுடியவில்லை. தொகுப்பு வேலைகள் முடிந்து, அந்தக் கதையைப் பெறமுடியாது என்ற தீர்மானத்தில் அச்சுக்குத் தயாரானபோது, மூக்கையா நடராஜா ஓர் அற்புத சஞ்ஜீவியைப் போல அந்த 'அல்லி' இதழை, பண்டாரவளையிலிருந்து கொண்டுவந்து தந்தார். இன்று அந்த சஞ்சிகையையும் தொலைத்து விட்டோம். உண்மையில் தெளிவத்தை ஜோசப்பின் அந்தக் கதை காப்பாற்றப்பட்டது என்றுதான் கூறவேண்டும்.

லண்டனிலிருந்து ஜோசப்பின் முழுக்கதைகளையும் தேடி எடுப்பது என்பது சாத்தியமாகாது என்றே எனக்குத் தோன்றியது. ஆண்டுகள் அவசரமாக நழுவிக்கொண்டிருந்தன. இடையில் கொவிட் தொற்று சாவகாசமாகச் சில ஆண்டுகளை விழுங்கின.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில் நான் தமிழகம் சென்றிருந்தபோது, தெளிவத்தை ஜோசப் நலங் குன்றி இருக்கிறார் என்றும் சிறுகதைத் தொகுப்பை உடன் கொண்டுவர வேண்டுமென்றும் இலங்கையிலிருந்து எச்.எச். விக்ரமசிங்க, மல்லியப்புசந்தி திலகர் ஆகிய இருவரும் தெரிவித்தனர்.

லண்டன் திரும்பியதும் முதல் வேலையாகக் கைவசம் உள்ள கதைகளைச் சேர்த்து, தொகுப்பைக் கொண்டுவந்து விடலாம் என்று முனைந்தபோதுதான், தேடியேயாகவேண்டிய கதைகளின் பட்டியல் கவலையைத் தந்தது.

இந்த வேளையில்தான் எள் என்றால் எண்ணெய்யாகச் செயற்படும் எச்.எச்.விக்ரமசிங்க இந்தச் சுமையைத் தன் தோளில் சுமக்க முன்வந்தார். வீரகேசரி நடத்திய மலையகச் சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளைத் தொகுத்து, எஸ்.எம்.கார்மேகம் அவர்கள் 1971இல் 'கதைக்கனிகள்' என்ற தலைப்பில் அத்தொகுதியை வெளியிட்டபோது, அதன் பின்னணியில் நின்று உழைத்தவர்கள் கே.கோவிந்தராஜும் எச்.எச்.விக்ரமசிங்கவும்தான். வீரகேசரியின் விநியோகப் பொறுப்பாளர் எஸ். பாலச்சந்திரனின் பொறுப்பில் வீரகேசரி நாவல் பிரசுரங்கள் வெளிவந்தபோது, எஸ்.எம்.கார்மேகம், அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோருடன் இணைந்து, வீரகேசரி வெளியிட்ட ஐம்பது நாவல்களின் வெளியீட்டிலும் அவற்றின் சந்தைப்படுத்தலிலும் முழுமூச்சாக இருந்து செயற்பட்டவர் விக்ரமசிங்க.

கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை' நாவல் வீரகேசரி வெளியீடாக வந்ததற்கு எச்.எச்.விக்ரமசிங்க ஆதார சுருதியாக அமைந்தார். கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவாக வீரகேசரியுடனும், இந்து கலாசார அமைச்சுடனும் இணைந்து நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டியினை முன்னின்று செயற்படுத்தி, பரிசு பெற்ற கதைகளைத் தொகுத்து 'மலையகப் பரிசுக்கதைகள்' என்ற தொகுப்பை வெளியிட்டு, அந்த நூலுக்கு கொழும்பிலும் மலையகம் எங்கிலும் வெளியீட்டு நிகழ்ச்சிகளை அவரே தனியொருவராக இருந்து அவற்றைச் சாதித்துக் காட்டினார்.

நான் வெளியிட்ட என். எஸ்.ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைத் தொகுப்பின் மறுபிரசுரத்தையும் எச்.எச்.விக்ரமசிங்க முன் நின்று வெளிக்கொணர்ந்தார்.

நவாலியூர் சு.சொக்கநாதன் எழுதிய 'மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி' என்ற பாமாலையை 1993ஆம் ஆண்டிலும், மாத்தளை வடிவேலனின் 'மலையக மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' என்ற ஆய்வு நூலை 1997ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். 'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரம்' (2014, 2017), பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம்-வாழ்வும் பணியும்' (2018, 2022), கவிஞர் பி.ஆர்.பெரியசாமியின் 'தோட்டத் தொழிலாளர்களின் வீரப்போராட்டம்' (2021) ஆகிய நூலாக்க முயற்சிகள் விக்ரமசிங்கவின் நூல் வெளியீட்டுத் திறனுக்குச் சான்று சொல்வன.

சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' (2022), சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' (2022) ஆகிய அரிய படைப்புகள் எச்.எச். விக்ரமசிங்க இல்லையென்றால் ஒருபோதும் பிரசுர வெளியைக் கண்டிருக்கமாட்டாது. மலையகக் கவிஞர் கலா விஸ்வநாதன் இயற்றிய, பெருஞ்சித்தர் பெரியானை குட்டி சுவாமிகள் பற்றிய 'சித்தரமிர்தம்' என்ற கவிச்சரத்திற்கும் விக்ரமசிங்க அவர்கள் நூல் வடிவம் தந்துள்ளார்.

இத்தகைய தொடர்ந்த -அயராத நூல் பதிப்புப்பணிகள் மலையக இலக்கிய வரலாற்றின் பதிப்புத் துறையில் அவருக்குத் தனி இடத்தைக் கொடுத்திருக்கிறது. பிறரது நூல்களுக்காக அவர் சுமக்கும் சிலுவை இது. அலைச்சலையும் உழைப்பினையும் துணிச்சலையும் வேண்டி நிற்கும் பயணம் இது.

தெளிவத்தை ஜோசப் மீது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் வாஞ்சை கொண்டிருந்த விக்ரமசிங்க இந்தச் சிறுகதைத் தொகுப்பாக்க முயற்சியைத் தனது சொந்தப் பணி போலக் கருதிச் செயலில் இறங்கினார்.

இலங்கையில் சாதாரண மக்கள் வாழ்க்கை நிலை மிக மிக மோசமாகிக் கொண்டிருந்த சூழலில், ஜோசப் கதைகளைத் தேடும் சிரமமான பணியை அவர் சாத்தியமாக்கினார்.

பெட்ரோலும் டீசலும் கிடைக்காத தருணத்தில் கொழும்பின் அருஞ்சுவடிகள் திணைக்களத்திற்குச் சென்று வருவது எவ்வளவு காசை விழுங்கியிருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. மின்வெட்டு காரணமாக, அருஞ்சுவடிகள் திணைக்களம் மிகச் சொற்ப நேரமே இயங்கியது. ஒவ்வொரு கதையையும் தேடிப் பிரதி எடுப்பது என்பது இன்னும் பணத்தைக் கொட்டியாக வேண்டிய நிலை. அருஞ்சுவடிகள் திணைக்களத்திலும் தேடிச் செல்லும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் அனைத்தும் இருக்கும் என்றும் சொல்வதற்கில்லை.

பத்திரிகை அலுவலகங்களின் நூலகங்களிலும், அவர்களின் பத்திரிகைச் சேமிப்புகளிலும் சென்று கதைகளைத் தேடிப் பாடுபட்டிருக்கிறார். சிறுகதைகள் வெளியான ஆண்டுகள் என்று ஜோசப் அவர்கள் உத்தேசமாகக் கூறிய ஆண்டுகளில், குறித்த பத்திரிகையில் ஒரு கதையும் வெளியாகவில்லை என்பதும் தெரிய வருகிறது. பணத்தைத் தண்ணீராக இறைத்தாலும் பல சமயங்களில் முயற்சிகள் வியர்த்தத்தில் முடிந்துள்ளன.

இந்த எல்லாச் சிரமங்களின் மத்தியிலும் ஜோசப்பின் தேடி மாளாத 18 சிறுகதைகளை விக்ரமசிங்க தேடிச் சேகரித்து அனுப்பியிருந்தார்.

என்னிடமும் சில மிக அரிதான கதைகள் இருந்தன. விக்ரமசிங்க இல்லை எனில், இந்தப் பெருந்தொகுப்பு சாத்தியமில்லை.

இவ்வளவிற்கும் அப்பால், சென்னையின் பிரபலமான எமரால்ட் வெளியீட்டகத்தின் உரிமையாளர் ஒளிவண்ணன் அவர்களுடன் பேசி, அவர்களின் வெளியீடாக இவ்வாண்டில் வெளியாவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டிருந்தார். இந்த ஆண்டில் சென்னை புத்தகக் கண்காட்சியில் புதிய 60 தமிழ், ஆங்கில நூல்களை அந்தப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

எனக்கும் விக்ரமசிங்கவிற்குமான தொடர்பு 55 ஆண்டுக் காலங்களைத் தொடுகிறது. சிற்றெறும்பின் சுறுசுறுப்புடன் செயற்படுபவர் என்று அமரர் இர.சிவலிங்கம் விக்ரமசிங்கவை வர்ணித்ததில் வியப்பில்லை.

எங்கள் தொடர்பு அனைத்துமே மலையக நூல் வெளியீடுகள் சார்ந்தனவாகவே அமைந்தன. விக்ரமசிங்க விரிந்த தொடர்பு வட்டத்தைக் கொண்டவர். எவருக்கும் உதவும் நெஞ்சம் கொண்டவர்.


'தெளிவத்தை ஜோசப் கதைகள்' என்ற இப்பெருந்தொகுப்பு மலையகத்திற்கு மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்திருக்கும் அருங்களஞ்சியமாகும்.

---

# வருட ஆசிரிய சேவையிலிருந்து

## ஓய்வுபெறும் 'ஸ்ரான்லி சேர்'

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் உதவி அதிபராகவும் க.பொ.த (உ/த) வகுப்புக்கான கணக்கீட்டு ஆசிரியராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும் செயற்பட்டுவந்த பி.ஸ்ரான்லி றஞ்சிதன், தனது 35 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை (09) ஓய்வு பெற்றுக் கொண்டார்.



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்தர கல்வியைப் பூர்த்தி செய்த இவர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வணிக பட்டதாரியாக வெளியேறி, தனது சொந்தக் கிராமமான பலாலி வடக்கில் அமைந்துள்ள அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் 1988 ஒகஸ்ட் 17ஆம் திகதி முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். அன்று ஆரம்பித்த இவரது கல்விக்கான பணியில் சிறந்த நற்பண்பாளராகவும் தலைமையாளராகவும் திறன்மிக்க நிர்வாகியாகவும் பிரகாசித்து, நற்பண்புகளும் ஒழுக்கமும் அறிவார்த்தமும் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கும் பொதுப்பணியிலேயே தனது வாழ்க்கையைக் கரைத்துக்கொண்டார்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தற்காலிக இடமாற்றத்துடன் பணிபுரிகையில், 1992இல் நிலவிய அகோர யுத்தம் காரணமாக, கொழும்புக்கு இடம்பெயர்ந்தார்.

1992ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியில் இணைந்து கொண்ட இவர், 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ஆம் திகதி வரை சுமார் 26 வருடங்கள் இக்கல்லூரியில் சேவையாற்றியுள்ளார். இதில் 22 வருடங்கள, தமிழ் பிரிவுக்கான உதவி அதிபராகப் பொறுப்பு வகித்திருந்தார்.

மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் மிகவும் கரிசனையுடன் செயற்படும் பண்பு கொண்ட இவர், அவர்களைக் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்ததுடன் அவர்களுடன் சிறப்பான உறவை நட்பார்த்தமாகப் பேணுவதிலும் அக்கறையுடன் செயற்பட்டுவந்தார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, தமிழ் பிரிவுக்கென அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம், தமிழ் பிரிவு பழைய மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்டு, மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கும் வரை, பழைய மாணவர்களுடனான ஒருங்கிணைப்பாளராகவும் ஒத்துழைப்பாளராகவும் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

2017ஆம் ஆண்டில் கொழும்பு இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்துச் சென்றிருந்த போதிலும், குறுகிய காலத்தில் அதாவது, 2018ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று, அண்மையில் ஓய்வுபெறும் வரையிலும், இக்கல்லூரியின் பாடசாலை சமூகம் போற்றிப் பெருமைகொள்ளும் வகையில் பணியாற்றியிருந்தார்.

வத்தளையில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியமையால், வத்தளை மற்றும் அயற்பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் மக்களின் சமூக - பொருளாதார பிரச்சினைகளை இவரால் ஆழமாக அடையாளம் காணமுடிந்திருந்தது. வத்தளை பிரதேச தமிழ் மக்களின் வாழ்க்கையில் கல்வியால்தான் நீடித்து நிலைக்கக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற தூரநோக்கத்துடன் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை இவர் எதிர்பார்த்திருந்தார்.

வத்தளை தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாழடிக்கும் வகையிலமைந்த ஒரு பிரச்சினையாக, ஆண்டு ஒன்றுக்கான பாடசாலை அனுமதி தொடர்ந்து கொண்டிருந்தது. தமிழ் மக்களின் பரம்பலுக்கு ஏற்றவாறாக தமிழ்ப் பாடசாலைகள் இல்லாமை காரணமாக, தமிழ் மாணவர்கள், சிங்கள மொழி பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் சேரும் அவலம் தொடர்ந்தது. இந்நிலைமையில், வத்தளையில் தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அவசியத்தை மனதில் இருத்திக் கொண்டு, பண்பும் வல்லமையும் மிக்கவரைத் தேடிக்கொண்டிருந்த 'கொடை வள்ளல்' அமரர் மாணிக்கவாசகம் ஐயாவுடனான சிறந்த தொடர்பை, வத்தளை தமிழ் சமூகத்தின் நலனுக்காக இவர் பயன்படுத்திக் கொண்டார்.

2019ஆம் ஆண்டு அருண் பிரசாந்த் அறக்கட்டளை ஊடாக, கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் இணைப்பு பாடசாலையாக 'வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்துக் கல்லூரி' தோற்றம் பெறுவதற்கு, அமரர் மாணிக்கவாசகம் ஐயாவுடன் இணைந்து செயற்பட்டிருந்ததுடன், இளைப்பாறும் வரையில் இரண்டு பாடசாலைகளுக்கு இடையிலும் இணைப்பாளராகவும் பணிபுரிந்தார். இதன் பெறுபேறாக, 2019ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் 58 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அருண் மாணிக்கவாசகம் கல்லூரியில் தற்போது தரம் ஆறு வரை 450 மாணவர்கள், கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றார்கள்.

க.பொ.த (உ/த) வகுப்புக்கான கணக்கீட்டு பாட உதவி பரீட்சகராகவும் மேலதிக உதவிப் பரீட்சகராகவும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு சிறந்த ஒத்துழைப்புகளை வழங்கிவரும் இவர், அதேபோன்று வத்தளை பிரதேசத்தில் வறுமைப்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளை இனம்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதில் அக்கறையுடன் செயற்படுவதுடன், இந்தப் பொதுநோக்கத்துக்காகத் தான் பெற்றுக்கொண்ட அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியையும் பொறுப்புணர்ந்து பயன்படுத்தி வருவது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

1964ஆம் ஆண்டு தை மாதம் ஒன்பதாம் திகதி, பிலிப்பையா - ஞானமலர் தம்பதிகளின் இளைய மகனாக மானிப்பாயில் பிறந்த இவருக்கு, மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் உடன்பிறந்தவர்களாவர். ஆசிரியராகக் கடமையாற்றிய தந்தையாரின் வழியில் இவர் தனது ஆரம்பக்கல்வியை மயிலிட்டி றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையிலும் காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் கற்றார். 1998ஆம் ஆண்டு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டபின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2004ஆம் ஆண்டு கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் ஓய்வு பெறுவதால் ஏற்படும் வெளியை, நிகராக நிறைவு செய்வது என்பது அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை. அந்த வெளிதான் இவரது தனித்துவத்தை மேலும் உணரப்பண்ணும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

-புனித அந்தோனியார் கல்லூரி தமிழ் பிரிவு பழைய மாணவர்கள் சங்கம் (TOBA)

-வத்தளை



ஒடிசா

# சிவப்பு எறும்பு சட்னிக்கு குறியீடு

ஒவ்வொரு வட்டார பகுதியில் உற்பத்தி ஆகக்கூடிய தனித்துவமான பொருட்களை அடையாளம் கண்டு அதற்கான சட்டப் பாதுகாப்பு வழங்குவதற்காக புவிசார் குறியீடு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் மதுரை மல்லி, ஆத்தூர் வெற்றிலை, வீரவநல்லூர் செடிபுட்டா சேலைகள் உள்பட பல்வேறு பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசின் தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சகத்தின் சார்பில் ஒடிசா மாநிலத்தின் சிவப்பு எறும்பு சட்னிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

புரதம், கால்சியம் உள்ளிட்ட பல்வேறு சத்துக்களை கொண்டுள்ள இந்த சட்னி,



நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது.

மேலும், சுறுசுறுப்பையும் அதிகரிக்கிறது.

புவிசார் குறியீடு அங்கீகாரமானது அந்தப் பொருளின் தரத்தை நம்பிக்கைக்குரிய முறையில் உறுதிப்படுத்தி, அப்பொருளை உலகளவில் எடுத்துச் செல்வதற்கு உதவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



கேரளா

## “பெண்கள், குழந்தைகள் வருவதை தவிர்க்க வேண்டும்”

பொங்கல் விடுமுறையை முன்னிட்டு 2 நாட்களுக்கு பெண்கள், குழந்தைகள் சபரிமலைக்கு வருவதை தவிர்க்க வேண்டும் என கேரள அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பத்தனம்திட்டா மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

“பொங்கல் பண்டிகைக்கு அதிக விடுமுறை தினங்கள் என்பதாலும், அடுத்த 10 நாட்களில் மகர விளக்கு சீசன் நிறைவடைய இருப்பதாலும் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு அடுத்த சில நாட்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன.

தரிசனத்துக்கான உடனடி முன்பதிவு வசதி புதன்கிழமை (10) முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், கூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு இவ்விரு நாட்களிலும் குழந்தைகள், பெண்கள் வருவதை தவிர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

விழுப்புரம்

## சிவனிடம் தி.மு.க மனு

திருவெண்ணெய் நல்லூரில் உள்ள கிருபாபுரீஸ்வரர்கோயிலில், முன்னாள் அமைச்சர் பொன்முடி விடுதலையாக வேண்டும் என்ற வேண்டுதலுடன் திராவிட முன்னேற்ற கழகத்தினர் (தி.மு.க) சிவபெருமானிடம் மனு கொடுத்துள்ளனர்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்குவித்த வழக்கில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சராக இருந்த க.பொன்முடி குற்றவாளி என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து 3 ஆண்டு சிறைத்தண்டனையும் விதித்தது. இதனால் தனது எம்.எல்.ஏ. பதவியை இழந்த பொன்முடி உச்ச நீதிமன்றத்தில் இது குறித்து மேல்முறையீடு மனு செய்துள்ளார்.

அதன் மீதான விசாரணை வெள்ளிக்கிழமை (12) நடைபெற உள்ள நிலையில், இது உள்ளிட்ட பிற வழக்குகளில் இருந்து அவர் விடுதலையாக வேண்டும் என தி.மு.கவினர் சிவன் கோயிலில் மனு அளித்துள்ளனர்.





# கிரிக்கெட் தடை நீக்கம்

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை இடைநிறுத்தி சர்வதேச கிரிக்கெட் பேரவை (ICC) விதித்துள்ள தடை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நீக்கப்படும் என தாம் நம்புவதாக சுற்றுலா மற்றும் காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இன்று (11) பிற்பகல் தெரிவித்தார்.

அடிக்கடி இலங்கைக்கு விஜயம் செய்து வரும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெஃப் அலார்டைஸ் உடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறான குறிப்பை தெரிவித்ததாக ஐ.சி.சி. அடுத்த செயற்குழு கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதால், இலங்கையில் தடையை நீக்குவதற்கு ‘நிகழ்நிலை’ ஊடாக விசேட செயற்குழு கூட்டம் நடத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் நீக்காவிட்டால் எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கட் பேரவையின் வருடாந்த மாநாட்டை இலங்கை இழக்க நேரிடும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.



## மிலனில் தொடரும் லொட்டரோ மார்டினெஸ்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மிலனின் முன்களவீரரான லொட்டரோ மார்டினெஸுடன் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட அக்கழகம் ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

பருவகாலமொன்றுக்கு 10 மில்லியன் யூரோக்கள் பெறுமதியிலான ஒப்பந்தத்தை 26 வயதான மார்டினெஸுக்கு வழங்க மிலன் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளின் குழாமில்

## ஹெட்மயர் இல்லை

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடர்களுக்கான குழாமில் ஷிம்ரோன் ஹெட்மயர் இடம்பெறவில்லை.

ஒ.நா.ச.போ குழாம்:
ஷே ஹோப் (அணித்தலைவர்), அல்ஸாரி ஜோசப், அலிக் அதனஸே, டெடி பிஷொப், கேசி கார்ட்டி, றொஸ்டன் சேஸ், மத்தியூ போர்ட், ஜஸ்டின் கிரேவ்ஸ், கவெம் ஹொட்ஜ், டெவின் இம்லாச், குடகேஷ் மோட்டி, கெஜோன் ஒட்லி, றொமாரியோ ஷெப்பர்ட், ஒஷேன் தோமஸ், ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர்.

இ-20 குழாம்:
றொவ்மன் பவல் (அணித்தலைவர்), ஷே ஹோப், ஜோன்சன் சார்ள்ஸ், றொஸ்டன் சேஸ், ஜேஸன் ஹோல்டர், அகீல் ஹொஸைன், அல்ஸாரி ஜோசப், பிரண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடகேஷ் மோட்டி, நிக்கலஸ் பூரான், அன்ட்ரே ரஸல், ஷெர்ஃபேன் ருதர்ஃபோர்ட், றொமாறியோ ஷெப்பர்ட், ஒஷேன் தோமஸ்.



பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய பற் கமின்ஸ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் பற் கமின்ஸ் முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே, மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை கமின்ஸ் அடைந்துள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா, ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காம் இடத்தை அடைந்துள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கெதிரான மேற்குறித்த டெஸ்டில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் ஜொஷ் ஹேசில்வூட், 11ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. பற் கமின்ஸ், 3. ககிஸோ றபாடா, 4. ஜஸ்பிரிட் பும்ரா, 5. இரவீந்திர ஜடேஜா, 6. ஒலி றொபின்ஸன், 7. ஜேம்ஸ் அன்டர்சன், ஜொஷ் ஹேசில்வூட், 9. மிற்செல் ஸ்டார்க், 10. பிரபாத் ஜெயசூரிய.

இதேவேளை பாகிஸ்தானுக்கெதிரான குறித்த டெஸ்டில் 122 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் மர்னுஸ் லபுஷேன், ஏழாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

இந்நிலையில் தென்னாபிரிக்காவுக்கெதிரான மேற்கூறப்பட்ட டெஸ்டில் 58 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் விராட் கோலி, ஒன்பதாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை மேற்படி போட்டியில் 55 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் றோஹித் ஷர்மா, 14ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்சன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. மர்னுஸ் லபுஷேன், 5. டரைல் மிற்செல், 6. விராட் கோலி, 7.ஹரி ப்றூக், 8. பாபர் அஸாம், 9. உஸ்மான் கவாஜா, 10. றோஹித் ஷர்மா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. ஜோ றூட், அக்ஸர் பட்டேல்.



ஸ்பெயின்

## முகக்கவசம் கட்டாயம்

ஸ்பெயின் நாட்டில் காய்ச்சல், கொரோனா மற்றும் பிற சுவாச நோய்கள் அதிகரித்து வருவதால், வியாழக்கிழமை (11) முதல் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் மற்றும் மருந்தகங்களில் முகக்கவசங்களின் பயன்பாடு கட்டாயமாக நிறுத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட அரசாங்க முடிவுகள், சில பிராந்திய நிர்வாகங்களின் எதிர்ப்பை எதிர்கொண்டது.

இந் நிலையில், ஸ்பெயின் நாட்டின் வெலெனிக்கா, கடலொனியா, முர்சியா ஆகிய மாகாணங்களில் பொது இடங்களில் கட்டாயமாக முகக்கவசம் அணிய உத்தரவிடப்பட்டுள்ளது.

கியூபா

## எரிபொருள் விலை 500 சதவீதம் உயர்வு

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் கியூபா - எரிபொருள் விலையை 500% உயர்த்தியுள்ளது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியால், எரிபொருள் விலையை 500 சதவீதம் உயர்த்த கியூபா அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, பெப்ரவரி 1ஆம் திகதி முதல் விலை உயர்வு அமலுக்கு வருகிறது.

25 பேசோ (பைசா) வில் இருந்த விலை 132 பேசோவாக உயர்கிறது. இது இலங்கை மதிப்பில் ஒரு லிட்டர் ரூ.2505க்கு விற்பனையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

## 20 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட மாலத்தீவு

மாலத்தீவு ஜனாதிபதி முகமது முய்சு அரசு முறை பயணமாக சீனா சென்றுள்ளார்.

இதன்போது, “சீனா மாலத்தீவின் நெருங்கிய நட்பு நாடு” என கூறியதுடன், தங்கள் நாட்டுக்கு அதிக சுற்றுலா பயணிகளை அனுப்புமாறு சீன அரசுக்கு கோரிக்கையும் வைத்தார்.

இந் நிலையில், புதன்கிழமை (10) ஜனாதிபதி முகமது முய்சு, பீஜிங்கில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இருதரப்பு உறவுகளை விரிவான கூட்டாண்மைக்கு உயர்த்துவதாக அறிவித்தனர். அதனை தொடர்ந்து, இருநாடுகளுக்கு இடையிலான 20 முக்கிய ஒப்பந்தங்களில் இருவரும் கையெழுத்திட்டனர்.

அண்மையில், இந்தியப் பிரதமர் நரேந்திரே மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து மாலத்தீவு அமைச்சர்கள் மூவர் விமர்சித்தனர். இது பெரும் சர்ச்சையை கிளப்பியதை தொடர்ந்து, அவதூறு கருத்து தெரிவித்த அமைச்சர்கள் மூவரும் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இருப்பினும் இந்தியா-மாலத்தீவு இடையிலான உறவில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 12, ஜனவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.